## வாரத்தில் ஓர் முத்து!

09 மார்ச் 2010 சகரியா பூணன்

# 45. கிறிஸ்துவின் இரத்தத்தில் பூரண மீட்பு காண வேண்டும்!

நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் பிரதானமான முதல் தேவை, நம்முடைய கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்படுவதேயாகும். ஆனால் நம்முடைய பாவத்திற்குரிய தண்டனையைத் செலுத்துவதைத் தவிர வேறு எந்த வழியிலும் நம்முடைய பாவக்கறையைப் போக்கிட தேவனால் கூடாததாகும்! ஏனெனில், "இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது" (எபிரெயர் 9:22) என வேதம் கூறுகிறது.

இயேசு கல்வாரி சிலுவையில் தம்முடைய இரத்தத்தை சிந்திய போது, நாம் செய்த ஒவ்வொரு பாவத்திற்குரிய மன்னிப்பையும் அவரின் இரத்தம் கிரயம் செலுத்தி பெற்றுக்கொண்டது. இருப்பினும், நாம் அந்த பாவ மன்னிப்பை **ஏற்றுக்கொண்டால்தான்** அது நமக்குச் சொந்தமாக முடியும். நாம் மெய்யாகவே நம்முடைய பாவங்களை விட்டு மனந்திரும்பி, அவரை விசுவாசித்து, அவர் வழங்கும் மன்னிப்பைப் பெற்றுக்கொள்வோமென்றால்..... கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாய் நம் எல்லாப் பாவங்களுக்குமுரிய **முழுமையான மன்னிப்பையும்** பெற்றுக்கொள்ள முடியும்.

இது மாத்திரமல்லாமல், கிறிஸ்துவின் இரத்தம் நம்மை **நீதிமான்களாயும்** மாற்றியிருக்கிறது (ரோமர் 19). நாம் நீதிமான்களாக்கப்படும் பாக்கியம், பாவங்கள் மன்னிக்கப்படுவதைப் பார்க்கிலும் மேலானதொன்றாகும். அது எப்படியெனில், நம் முழு ஜீவியத்திலும் ஒரு தடவைகூட பாவஞ்செய்யாததைப் போல "நீ இன்றிலிருந்து நீதிமான்" என தேவனால் அறிவிக்கப்படுவதே அந்த சிலாக்கியமாகும். இதைத்தான் தேவன் நமக்கு வாக்குதத்தமாய் அருளி "அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" (எபிரெயர் 8:12) என கூறினார். ஆம், அவர் நம்மைக் காணும்போது "ஒருபோதும் பாவம் செய்யாதவர்கள் போலவே" நம்மைக் காண்பார்!! நாம் நீதிமான்களாக்கப்படுவதின் பொருள் இதுதான். இத்தனை ஆச்சரியமான வலிமை கொண்டதுதான் கிறிஸ்துவின் இரத்தம்! இன்று அநேக விசுவாசிகள் தங்கள் கடந்தகால ஜீவியத்தினிமித்தம் தொடர்ச்சியான குற்றவுணர்வுடன் ஜீவிக்கிறார்கள். இது ஏனென்றால், கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் தேவன் அவர்களை நீதிமான்களாக்கியிருக்கிறார் என்ற சத்தியத்தை காணமுடியாதபடி சாத்தான் அவர்களின் கண்களை குருடாக்கியதேயாகும்!!

மேலும், கல்வாரி சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாய் "**தேவனோடு சமாதானத்தை** உண்டுபண்ணும் ஒப்புரவாகுதலை" கிறிஸ்து ஏற்படுத்தியுள்ளார் (கொலோசெயர் 3:20). ஆம், தேவன் நமக்கு எதிராளியாக அல்ல, நம்முடைய நண்பராகவே இருக்கிறார்! இந்த சத்தியம் நம் யாவருடைய மனதிலும் வலிமையாய் நிலைகொண்டிருக்க வேண்டும். ஏனெனில், இன்று அநேக விசுவாசிகள் தங்களிடம் தேவன் மகிழ்ச்சியாய் இல்லையென்றும், தங்கள்மீது இடைவிடாது கோபம் கொண்டிருக்கிறார் என்றுமே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது அனைத்தும் சாத்தானுடைய பொய்யேயாகும்! இதன் மூலமாய் அநேக விசுவாசிகளை அவன் ஆக்கினைக்குள்ளாகப் பிடித்து அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை சாத்தான் தடைசெய்கிறான். கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாய் நாம் **தேவனுக்கு நண்பர்களாய்** மாறிவிட்டோம் என்ற சத்தியத்தை நாம் விசுவாசிக்கவில்லையென்றால், ஒருக்காலும் நாம் ஆவிக்குரிய வளர்ச்சியடையவே மாட்டோம்!!

தமிழ் வடிவம் : T. ரத்தினகுமார்

© Zac Poonen ( 2009 ) 